Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No STC.NO.923/2021, Cr.No.425/2019, Tirupathur Taluk PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.7, Page.No.

| | |
|---|---|
| பெயர் | செந்தில்குமாரி |
| வயது | 51 |
| தந்தை பெயர் | தாமோதிரன் |
| தொழில் | குடிமுறை மருத்துவர் |
| கிராமம் | திருப்பத்தூர் |
| மாவட்டம் | திருப்பத்துர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 20th day of November 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை (எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை)</u>**

நான் தற்போது திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் குடிமுறை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.10.2019 அன்று காலை 11.20 மணியளவில் விஜய் வித்யாலயா பள்ளி முன்பு விபத்து ஏற்பட்டு விபத்தில் காயமுற்றவர்களை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அதில்

1. மஞ்சுளா என்பவரை பரிசோதித்ததில்,நெற்றியில் 2*2*1 செ.மீ என்ற அளவில் கண்ணிய காயமும், அவருக்கு வலது இடுப்பு பகுதியில் வலி இருப்பதாகவும் கூறினார். எனவே, அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளித்தேன். மேற்சொன்ன காயம் **சாதாரணகாயம்** என்று சான்றளித்தேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. மேகலா என்பவரை பரிசோதித்ததில், வலது முழங்கயையில் 2*2 செ.மீ என்ற அளவில் சிறாயப்பு காயம் இருந்தது. எனவே, அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளித்தேன். மேற்சொன்ன காயம் **சாதாரணகாயம்** என்று சான்றளித்தேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. சின்னன்னன் என்பவரை பரிசோதித்ததில், அவரது இடது கண்ணில் இரத்தக் கசிவு இருந்தது. தலையில் ஒரு சிறாய்ப்பு காயம் 1/2*1/2 செ,மீ என்ற அளவில் இருந்தது. மேற்சொன்ன காயம் **சாதாரணகாயம்** என்று சான்றளித்தேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. செஷாந்த் என்பவரை பரிசோதித்ததில், வலது காலில் சிறாயப்பு காயம் 3*2 செ.மீ என்ற அளவில் வீக்கத்துடன் இருந்தது. எனவே, அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளித்தேன். மேற்படி என்னிடம் உள்ள ஆவணங்களின அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் **சாதாரணகாயம்** என்று சான்றளித்தேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5.** ரகுபதி என்பவரை பரிசோதித்ததில், வலது முழங்கயைில் 3*2*1 செ.மீ என்ற அளவில் வெட்டுக்காயமும், அதனை சுற்றி 15*5 என்ற அளவில் சிறாய்ப்பு காயமும் இருந்தது. எனவே, அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளித்தேன். மேற்படி அவரை X-Ray எடுத்ததில் அவருக்கு வலதுகை முட்டியில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. மேற்படி அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றளித்தேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**6.** பெருமாள் என்பவரை பரிசோதித்ததில், இடது கால் முட்டியின் கீழ் வீக்கத்துடன் கூடிய சிறாய்ப்பு காயம் 1/2*1/2 என்ற அளவிலும், நெற்றியில் வெட்டுக்காயம் 4*1/2*1/2 என்ற அளவிலும் இருந்தது. எனவே, அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளித்தேன். மேற்படி அவருக்கு ஏற்பட்ட காயம் **சாதாரணகாயம்** என்று சான்றளித்தேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**7.** புஷ்பா என்பவரை பரிசோதித்ததில், வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. வலது பக்க நெஞ்சிலும், இடுப்பிலும் வலி இருப்பதாக கூறினார். எனவே, அவரை தருமபுரி அரசு மருத்தவமனைக்கு மேல்சிகிச்சைக்காக பரிந்துரைத்தேன். மேற்படி என்னிடம் உள்ள ஆவணங்களின அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் **சாதாரணகாயம்** என்று சான்றளித்தேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

காயச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள காயங்கள் கரடு முரடான சாலையில் விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அவ்வாறு விழும் போது கூர்மையான பகுதிகளில் மோதினால் வெட்டு காயம் ஏற்பட

வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். உடல் வலியானது வேலை பளுவினால் ஏற்பட்டிருக்க கூட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். கண்ணில் ரத்தக்கசிவு வேறு விதத்தில் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. கண்ணில் ரத்தக்கசிவு மட்டுமே இருந்தது. கனமான பொருள் கையின் மீது விழும்போது எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.